[1992 செப்டம்பர் 24

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 66, திரு. ஆர். டி. அரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைசசர்.

66—

கொளஞ்சியப்பர் அரசுக் கல்லூரி மாணவர்களுக்குப் புதிய கட்டிடம்.

9501—திரு. ஆர். டி. அரங்கநாதன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலம் கொளஞ்சியப்பர் அரசுக் கல்லூரியில் மாணவர்களுக்குப் போதிய கட்டிட வசதிகள் இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தற்போது இருக்கும் பாரதி நூற்றாண்டு மண்டபத்தில் மேல்பகுதியில் புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இது தொடர்பாக இக்கல்லூரி முதல்வருடன் தொடர்பு கொண்டதில் மாணவ மாணவியரின் எண்ணிக்கைக் கேற்ப சில ஆண்டுகளாக போதிய இடவசதி இல்லையென்று அறியப்படுகிறது.

(ஆ) கல்லூரி முதல்வருடன் தொடர்பு கொண்டு, தேவைப்படும் கட்டிட வசதிகள் செய்வதற்குரிய சாத்தியக் கூறுகள், கல்லூரிக் கல்வி ஆணையரால், நிதி ஒதுக்கீட்டிற் கேற்பப் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது.

திரு. ஆர். டி. அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படுகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய தொகுதி மக்களுடைய சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் பட்டப் படிப்பு மற்றும் மேல்நிலை பட்டப் படிப்பு ஆகிய வகுப்பு

1992 செப்டம்பர் 24]

களில் மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். விருத்தாசலத்தைச் சுற்றியுள்ள நெய்வேலி, வடலூர், கம்மாபுரம், உளுந்தூர்பேட்டை, மங்களூர் போன்ற பகுதிகளிலிருந்து மாணவ மாணவிகள் விருத்தாசலம் அரசு கலைக் கல்லூரிக்கு வந்து கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கல்லூரி வகுப்புகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவிகள் உள்ளதால், அங்கே உட்காருவதற்குக்கூட இடமற்ற நெருக்கடியான சூழ்நிலை இருந்து வருகிற காரணத்தால், அந்த நெருக்கடியைப் போக்குவதற்கு,—தமிழகத்தில் பல்வேறு நெருக்கடிகளைத் தீர்த்து, எல்.டி.டி.ஈ. நெருக்கடியை ஒடுக்கிக்கொண்டிருக்கும் வீரத்தாய், இதயதெய்வம், டாக்டர், புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அங்கே கூடுதல் கட்டிடங்களை வழங்குவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அத்துணை காரணங்களின் அடிப்படையிலேதான் அந்தக் கல்லூரியினுடைய தேவைக்கேற்ப கட்டிடம் கட்டுவது என்கிற கருத்துரு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 67, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

67—

ஜவ்வரிசி தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்துதல்.

9486—திரு. கே. கந்தசாமி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வரிசி தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுப் பொருட்கள் சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதிப்பதால், தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளிக்கும்போதே கழிவுப் பொருட்களைக் கட்டுப்படுத்த உரிய ஏற்பாடுகள் உள்ளதா என்பதை கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,